DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHIRAMERUR

| | | |
|---|---|---|
| Calendar | : | CC No. **44/2023** |
| Deposition of witness for | : | **PW 4** |
| Name | : | பாஷியம் |
| Father Name | : | ராவுத்கான் |
| Village | : | உத்திரமேரூர் |
| Taluk | : | உத்திரமேரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**18.03.2024**

**முதல் விசாரணை**

நான் உத்திரமேருரில் வசிக்கிறேன். உத்திரமேரூரில் ஜவுளிக்கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்டும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். சில மாதங்களுக்கு முன்பு உத்திரமேரூர் காவல் நிலைய போலிசார் நூக்காலம்மன் கோயில் திருவிழா முடிந்து மறுநாள் வந்து அந்த இடத்தை பார்த்து தெருபற்றி என்னிடம் விசாரித்து என்னிடம் தாள்களில் கையெழுத்து வாங்கி சென்றார்கள். போலிசார் அந்த இடத்தில் வந்து விசாரணை செய்ததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகவும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு மேற்படி

சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 20.09.2022 அன்று பகல் 11.00 மணியளவில் உத்திரமேரூர் நூக்காலம்மன் கோயில் அருகே சம்பவ இடத்தை உத்திரமேரூர் காவல் நிலைய போலிசார் வந்து பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தற்கும் பின்பு அதே நாள் 2.30 மணியளவில் உத்திரமேரூரில் உள்ள மணிகண்டன் என்பவரின் வீட்டின் பின்புறம் இருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை போலிசார் கைப்பற்றி தாயரித்த மகசரில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேனா என்றால் எனக்கு அதுப்பற்றி ஒன்றும் தெரியாது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

பார்வை மகசரில் உள்ள கையெழுத்து அல்ல. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை போலிசார் என்னை விசாரித்தற்காக கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHIRAMERUR

| | | |
|---|---|---|
| Calendar | : | CC No. **44/2023** |
| Deposition of witness for | : | **PW 3** |
| Name | : | விநாயகம் |
| Father Name | : | ராஜி |
| Village | : | குப்பைநல்லூர் |
| Taluk | : | உத்திரமேரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**18.03.2024**

**முதல் விசாரணை**

நான் குப்பைநல்லூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆலோபிளாக் தொழில் செய்கிறேன். என்னிடம் காட்டப்டும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்குப்பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் விசாரித்தபோது சம்பவம் பற்றி தெரியாது என்று சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு உதவி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 20.09.2022 அன்று பகல் 11.00 மணியளவில் உத்திரமேருர் நூக்காலம்மன் கோயில் அருகே சம்பவ இடத்தை உத்திரமேரூர் காவல் நிலைய போலிசார் வந்து பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தற்கும் பின்பு அதே நாள் 2.30 மணியளவில் உத்திரமேரூரில் உள்ள மணிகண்டன் என்பவரின் வீட்டின் பின்புறம் இருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை போலிசார் கைப்பற்றி

தாயரித்த மகசரில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேனா என்றால் எனக்கு அதுப்பற்றி ஒன்றும் தெரியாது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது கையெழுத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.